# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2018 - 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| எ - கா |
|---|

தமிழீழத்தின் தேசிய விலங்கு

<u>சிறுத்தை</u> .

( சிறுத்தை, சிங்கம், யானை )

1. வாய்க்காலில் நீர் ____________ போது சல சல என்று ஒலி கேட்கும்.

( வீசும், ஓடும், பெய்யும்)

2. மங்கல நிகழ்வுகளில் வீட்டு வாசலில் கட்டப்படும் மரம் ____________ .

( கமுகு, வாழை, பலா )

3. நரி ____________ என்று ஊளையிட்டுக் கொண்டு ஓடியது.

( ஊ ஊ, வள்வள், கூ கூ )

4. பாரிசு நகரத்தில் ____________ கட்டிய வெற்றி வளைவு உள்ளது.

( இராவணன், சங்கிலியன், நெப்போலியன் )

5. கசப்புச் சுவையுடைய காய்கறிகளில் ஒன்று ____________ .

( வெண்டைக்காய், பாகற்காய், பூசனிக்காய் )

6. மாவீரர் நாள் ______________________ இல் கொண்டாடப்படும்.

(கார்த்திகை 25, கார்த்திகை 26, கார்த்திகை 27)

7. அடங்காப்பற்று எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட இடம் ______________________.

(வன்னி , யாழ்ப்பாணம், கொழும்பு)

8. தென்னையிலிருந்து ______________________ விழுந்தது.

(தேங்காய், நுங்கு, பாக்கு )

9. சிறுமி இன்று நீந்துகிறாள். சிறுமி நாளை ______________________.

( நீந்தினாள், நீந்துவாள், நீந்தும் )

10. ஆடி + கூழ் என்பதைச் சேர்த்து எழுதினால் ________________.

( ஆடிகூழ், ஆடிக்கூழ், ஆடிய்க்கூழ் )

11. நிலா இரவில் ___________________ த் தரும்.

( ஒலியை, ஒழியை, ஒளியை )

12. நீரில் வாழும் உயிரி ___________________.

( இறால், பன்றி, பருந்து )

13. லூவர் என்னும் அரும்பெருங்காட்சியகம் அமைந்துள்ள நாடு

______________ .

( பிரான்சு, இத்தாலி, கனடா)

14. **ஒலிவட்டு:-** சிறுமிக்குப் பேகனின் கதையைக் கூறியவர்

______________ .

( பாட்டி, அம்மா, அக்கா )

15. உண்மை என்பதன் எதிர்ச்சொல் ______________ .

( பொய், பகை, பெரிது )

16. எறும்பு ஊரும். அதுபோல் தவளை ______________ .

( பறக்கும், ஓடும், தத்தும் )

17. தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் ______________ .

( சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு )

18. புலிக்கொடி ______________ கொடியாகும்.

( சேரரது, சோழரது, பாண்டியரது )

19. ஓவியன் ______________ சிற்பத்தை எல்லோரும் பாராட்டினர்.

( வரைந்த, செதுக்கிய, மீட்டிய )

20. தமிழீழம் ______________ பக்கம் கடலால் சூழப்பட்டது.

( மூன்று, நான்கு, இரண்டு )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| பளபள | ஏறினான் | காய்ச்சிய |
| விலங்ககம் | விண்ணுந்து | ~~மாவீரர்~~ |

எ - கா

மாவீரர் நாளில் கார்த்திகைப்பூ முதலிடம் பெறுகிறது.

1. அம்மா ______________ பால் சுவையாக இருந்தது.

2. தேன்மொழி யானையைப் பார்க்க ______________ சென்றாள்.

3. தங்கையின் வளையல் ______________ என்று மின்னியது.

4. வான்வழியாகச் செல்லும் உந்து ______________.

5. தம்பி மெல்ல மெல்லப் படிகளில் ______________.

புள்ளிகள் 10

**3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

**எ - கா**

வாழையின் கிழங்கிலிருந்து வாழைக்கன்று முளைக்கும்.

1. தமிழர் பல நாடுகளில் ________________ .

2. கற்றவர்களுடன் சேர்ந்தால் நல்ல அறிவைப் ________________ .

3. நாங்கள் பொய் சொல்லக் ________________.

4. இனியன் புல்லாங்குழல் ________________ .

5. மாதவி பூக்களைக் ________________ .

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புவோம்.**

எ - கா

உனது கையில் என்ன இருக்கிறது?

( ஏன், என்ன )

1. வெந்நீர் ஊற்றுகள் ______________ உள்ளன?

( எங்கே, எது )

2. பூக்களில் தேன் குடிப்பவை ______________?

( எவற்றை, எவை )

3. ஆத்திசூடியை எழுதியவர் ______________?

( யார் , யாருக்கு)

4. நீங்கள் ______________ தமிழ்ப்பள்ளிக்குச் செல்லவில்லை?

( எதில், ஏன் )

5. மல்லிகை ______________ மலரும்?

( எப்பொழுது, என்ன )

புள்ளிகள் 05

5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யா | ழ் | ப் | பா | ண | ம் | ந |
| எ | தி | ம | ன் | னா | ர் | ண் |
| று | ரு | ந | ந | X | நு | டு |
| ம் | கோ | ல் | வா | சி | ள | த |
| பு | ண | லூ | லி | ல | ம் | க |
| தே | ம | ர் | X | ந் | பு | டே |
| னீ | லை | எ | லி | தி | X | ர் |

**இடங்கள்**

**சிற்றுயிரிகள்**

எ - கா

யாழ்ப்பாணம் ________ நண்டு ________

________ ________

________ ________

________ ________

________ ________

________ ________

புள்ளிகள்10

6) **மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| நாடுகளில் | கிளைகள் | ~~மரங்கள்~~ |
| உள்ளன | தைப்பொங்கல் | மாம்பழம் |

**எ - கா**

உலகில் பல மரங்கள் உள்ளன. அவற்றுள் மாமரமும் ஒன்று.

இதற்குக் ______________ உண்டு. மாமரத்தில் இருந்து ______________ கிடைக்கிறது. மாம்பழத்தில் பல வகைகள் ______________. அவற்றுள் சில கறுத்தக்கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான். ______________ அன்று மாவிலை தோரணம் கட்டுவர். மாம்பழம் முக்கனிகளில் ஒன்று. மாமரத்தை ஆசிய ______________ கூடுதலாகக் காணலாம்.

புள்ளிகள் 10

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

| எ - கா |
|---|

வாழைக்குலையில் காய்கள் எப்படி இருக்கும்?

சீப்புச்சீப்பாக

1. அதியர்மான் நெல்லிக்கனியை யாருக்குக் கொடுத்தார்?

_______________________________________________

2. பழங்காலத்தில் மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எவ்வாறு சென்றனர்?

_______________________________________________

3. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

_______________________________________________

4. பண்டாரவன்னியனின் நடுகல் நாட்டப்பட்ட இடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

_______________________________________________

5. ஈபில் கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**8) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நாம் வீட்டில் பல செல்ல உயிரிகளை வளர்க்கின்றோம். அவை நாய், பூனை, முயல் போன்றனவாகும். மகிழன் பள்ளி செல்லும் மாணவன். அவன் வீட்டில் ஒரு பூனையை வளர்த்தான். அதன் பெயர் அரசி. அது "மியா மியா" என்று கத்தும். அவன் பூனைக்குப் பாலும் சோறும் உண்ணக் கொடுப்பான். அது மாலையில் மகிழனுடன் வெளியே செல்லும். அங்கே பூனை பந்தை உருட்டி உருட்டி விளையாடும். மகிழன் பூனையுடன் அன்பாக இருப்பான்.

**எ - கா**

வீட்டில் வளர்க்கும் செல்ல உயிரிகள் எவை?

வீட்டில் வளர்க்கும் செல்ல உயிரிகள் நாய், பூனை, முயல்

1. மகிழன் வீட்டில் எதை வளர்த்தான்?

 ______________________________.

2. பூனை எப்படிக் கத்தும்?

 ______________________________.

3. மகிழன் பூனைக்கு எவற்றை உண்ணக் கொடுப்பான்?

 ______________________________.

4. மகிழனுடன் பூனை எப்போது வெளியே செல்லும்?

 ______________________________.

5. பூனை எதை உருட்டி உருட்டி விளையாடும்?

 ______________________________.

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15